பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
31-10-1993
யாழ்ப்பாணம்

எங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 14 சனிக்கிழமை (30-10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 336

# இலங்கை அகதிகள் பிரச்சினைக்கு அரசின் வன்முறைகளே காரணம்

## அகதிகளின் நலன் காக்கும் பிரிட்டிஷ் கவுன்ஸில் அறிவிப்பு

லண்டன், ஒக்டோபர் 30

அகதிகளாகப் பலர் — லட்சக் கணக்கானோர் — இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பியோடியதற்கு அரசாங்கத்தால் தூண்டப்பட்ட வன்முறையே காரணமாகும்.

பிரிட்டனில் உள்ள அகதிகள் நலன் காக்கும் கவுன்ஸில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"இலங்கை அகதிகள் — ஒரு முடிவற்ற பயணம்" என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் சாரம் வருமாறு:-

இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்ற அகதிகளின் எண்ணிக்கை ஐந்து லட்சத்துக்கும் அதிகமாகும். இலங்கைக்குள்ளேயே இடம்பெயர்ந்தவர் எண்ணிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தார், தே.எண்ணெய் மற்றும்

## 6,500 பரல் மண்எண்ணெய் இரு வாரத்திற்குள் வரும்

யாழ்ப்பாணம், ஒக். 30

அடுத்த மாத நடுப்பகுதிக்குள் யாழ். மாவட்டத்துக்கு ஆறாயிரத்து 500 பரல் மண்ணெண்ணெய் வந்து சேர இருக்கிறது.

கொழும்பில் இருந்து நேற்று திரும்பிய யாழ் அரச அதிபர் திரு. கா.மாணிக்கவாசகர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த வார இறுதியில் கொழும்பில் இருந்து புறப்படும் 'ருகுணு' கப்பலில் 3 ஆயிரம் பரலும்— அடுத்த வாரத்தில் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து பொருள்களை ஏற்றிய பின் யாழ்ப்பாணம் வரவிருக்கும் "கோமாரி" கப்பல் மூலம் 3 ஆயிரத்து 500 பரலும் மண்ணெண்ணெய் எடுத்து வரப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் கோமாரி கப்பலில் ஆயிரத்து 400 பரல் தேங்காய்எண்ணெய்யும், 100 பரல் தாரும் எடுத்து வரப்படவிருக்கின்றன. (உ-ச)

### விமான நிலையத்தில்

## சு.கவின் 7 எம்.பிக்கள் அனுராவை வரவேற்றனர்

கொழும்பு, ஒக். 30

ஸ்ரீ. ல. சு. கவிலிருந்து வெளியேறி ஐ. தே. கவில் சேர்ந்து கொள்ள முடிவு செய்த பின்னர், அனுரா பண்டாரநாயக்கா நேற்றுக் காலை லண்டனிலிருந்து கொழும்பு திரும்பினார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பயணிகள் தங்குமிடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், ஐ. தே. கவில் சேருவதற்கு தாம் எடுத்த முடிவை அவர்களுக்கு உறுதிப்படுத்தினார். சுதந்திரக் கட்சி எம். பிக்களான பிரதீப் ஹப்பங்கம, எம். கே. டி. எஸ். குணவர்த்தனா, ஹேமகுமாரே நாணயக்காரா, லலனி ராஜபக்ஸ, ஜினதாஸா நியதபால, டாக்டர் சுமால் கருணாநாயக்கா, ஹலீம் இஷாக் ஆகியோரும் மற்றும் அவரின் நண்பர்களும் விமான நிலையத்தில் அனுராவை வரவேற்றனர். (உ-எ)

### ஐ. தே. கவில் சேருவதற்கான

## விண்ணப்பத்தை அனுரா டி. பியிடம் சமர்ப்பித்தார்

கொழும்பு, ஒக். 30

அனுரா பண்டாரநாயக்கா நேற்று ஜனாதிபதி விஜேதுங்காவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து, ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துகொள்வதற்கான விண்ணப்பப் படிவத்தை கையளித்தார்.

ஜனாதிபதி அதனை வாங்கி அருகில் இருந்த அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளருமான சிறிசேன கூரேயிடம் கொடுத்தார்.

இச்சந்திப்பின் போது அரசமைப்பு விவகார அமைச்சர் கே. என். சொக்ஸியும் கூட இருந்தார். (உ-எ)

### வடக்கு - கிழக்கில் உள்ள

## ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப திறைசேரி அனுமதி

### ஜனாதிபதி டி. பி. அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்ப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இது குறித்து அறிவித்திருக்கிறார்.

இம்மாகாணத்தில் 6 ஆயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. அதே சமயம் ஆசிரிய நியமனத்திற்கான கல்வித் தகைமைகளுடன் பல்லாயிரக் கணக்கானோர் இம்மாகாணத்தில் வேலையற்று இருக்கின்றனர். அத்துடன் தொண்டர் ஆசிரியர்களாகவும் பலர் கடமையாற்றுகின்றனர். ஆசிரிய நியமனங்கள் வழங்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் கான்ஸ்டபிள் பலி

யாழ்ப்பாணம், ஒக். 30

திருமலை மாவட்டம் புல்மோட்டையில் கடந்த திங்களன்று ரோந்துசென்ற பொலிஸார் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்தார். (உ-3)

## 'அஸிட்' பருக்கிய படையினர்

யாழ்ப்பாணம், ஒக். 30

'அஸிட்' திராவகம் கொண்டு வந்த தமிழர் ஒருவருக்கு அந்த அஸிட்டை வற்புறுத்தி இராணுவத்தினர் பருக்கினர்.

வவுனியா சோதனைச் சாவடியில் இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

வவுனியா, சிச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த — இரு பிள்ளைகளின் தந்தையான — சுப்பையா கிருஷ்ணராஜா (36 வயது) என்பவரே அசிட் பருக்கப்பட்டவராவார். இவர் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார். (உ-3)

## சினைப்பருக்கு சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 30

தென்மராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் காவலரணில் இருந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் காலை 5.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

## விபத்தில் 2 பொலிஸார் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

ஹொரவப்பொத்தானை மாமடு கற்குழிப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஸ்ரீலங்கா பிசேவ் பொலிஸார் இருவர் உயிரிழந்தனர்.

டிரக்வண்டி ஒன்றும், மோட்டார் ... இருவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர் ... பட்டது. (உ-3)

## கப்பலில் வரும் பொருள்கள்: இனி கூட்டாகச் சோதனை

### படைகள் இணைந்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 30

வடக்கே கப்பல் மூலம் அனுப்பப்படும் பொருள்களை கடற்படை, விமானப்படை, இராணுவம், பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்தோர் கூட்டாகச் சோதனை செய்யும் நடைமுறையை அரசு அமுலுக்கு கொண்டுவருகிறது.

கப்பல் மூலம் அனுப்பப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கொழும்புத்துறைமுகத்தில் வைத்து ஏற்றப்படும் போது இதுவரை காவலும் கடற்படையினர் மட்டுமே சோதனை செய்து வந்தனர்.

தற்போதைய புதிய நடைமுறையின்படி, முப்படையினரும், பொலிஸாரும் இணைந்து கூட்டாகச் சோதனை செய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் என்ற சந்தேகத்தில்

## தலைநகர் கொழும்பில் முஸ்லிம்களும் கைது!

திருமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை முஸ்லிம்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப்போல காணப்படுவதால் அவர்களையும் கொழும்பில் பொலிஸாரும், இராணுவத்தினரும் கைது செய்கிறார்களாம்.

முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகரான மருதூர்கனி இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்களில் பெரும்பாலானோருக்கு சிங்கள மொழியில் சரளமாகப் பேச முடிவதில்லை. இந்த முஸ்லிம்களின் பெயர்களும் "சின்னத்தம்பி", "இளையதம்பி",

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்

## கண் கட்டப்பட்ட நிலையில் 10 நாட்கள் விசாரணையில்!

### கொழும்பில் சம்பவம்

கொழும்பு, ஒக். 30

இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட 15 வயதான தமிழ் வாலிபர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் 10 நாட்கள் விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் ஒருவரின் குடும்ப நண்பரின் மகனே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட பின் விடுவிக்கப்பட்டார். இந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழா!
வழிவிட்டு, வழிவிட்டு
வாழ்விடம் இழந்துவிட்டோம்
இனித் தலை நிமிர்ந்து கொள்வோம்
போராட்டமே புதுவாழ்வு தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை சிறுவர் கல்வி வளர்ச்சி நிதிக்காக

## மாபெரும் கலைவிழா

இடம்: கிறிஸ்தவக் கல்லூரி மண்டபம் கோப்பாய்

காலம்: 30 – 10 – 1993 சனி (இன்று)

இரு காட்சிகள்: பிற்பகல் 2 – 30
இரவு 7 – 30

யூட்ரஜிதா அவர்களின்
★ நடன அரங்கம்

யோன் கபாஸ் அவர்களின் மிலோடிக்கா
★ இசை அரங்கம்
★ நாடக அரங்கம்

மெய்ப்பொருள் (புராண நாடகம்)
கல்லாய் மனிதராய் (குறியீட்டு நாடகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம்:
100/-; 50/-, 20/-; 10/-

(27883)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிருத்தியமும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 – 07 – 1915 | 27 – 09 – 1993 |

### கந்தையா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற மலேசியன் புகையிரத உத்தியோகத்தர்)

வற்றாத பாசத்தால் வளர்த்தெடுத்தவரே
நெற்றாகி நினைந்துருக விட்டதேன் காரணமோ
பூண்டபுகழாலே பிறர்போற்ற நின்றீர்கள்
நாட்கள் கடந்தபோதும் எம்நெஞ்சைவிட்டு
நீங்காத அப்பாவே.

அன்னாரின் மரணச்சடங்கின்போது எங்களின் துயரங்களை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (31-10-93) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மருமக்கள், குடும்பத்தினர்.

சக்கோட்டைத்தை,
கரணவாய் வடக்கு. (6569)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 – 05 – 1939 | 30 – 09 – 1993 |

### கனகரத்தினம் தனபாலசிங்கம்

(யாழ் மெட்டல் முகாமையாளரும், திருமறைக் கலா மன்ற யோகாசன ஆசிரியரும்)

எண்ணற்ற செயல் திறமை மிகு
எம்மினிய தெய்வமே அப்பாவே!
கண்ணற்றவர்களாய் இங்கு
நாம் வாழ வழி வகுத்தானே காலன்!

இறையடி சேர்ந்த உம் ஆத்மா சாந்தியடைவதாக!

- குடும்பத்தினர்.

இல. 18/1, மணல்தறை லேன்,
சுந்தர்மடம், யாழ்ப்பாணம். (27881)


# கிழக்கில் ஜனவரி மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள்

## ஜனாதிபதி டி. பி. அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

★ கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மாநகரசபை, மூன்று நகர சபைகள் உட்பட 35 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வவுனியா நகரசபைக்குமான தேர்தல்கள் அடுத்த ஜனவரியில் நடத்தப்படும்.

★ அதனைத் தொடர்ந்து வடக்கு — கிழக்கு இணைப்பு சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

— இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அறிவித்திருக்கிறார்.

இரத்தினபுரி நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் அரச ஊழியர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

★ வடக்கு - கிழக்கில் உள்ளது இனப்பிரச்சினையல்ல; பயங்கரவாதப் பிரச்சினையே.

★ நகரூரமைப்புத் தெரிவுக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரியில் நடத்தப்படும்.

★ இணைப்புத் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பில் கிழக்கு மக்கள் இணைப்பை எதிர்த்து வாக்களித்தால் அது பயங்கரவாதத்திற்கு சங்கூதுவதாக இருக்கும்; தீவிரவாதிகள் கிழக்கு மாகாணத்தை தமது தாயகம் என்று கூறுவதற்கு உரிமை இல்லாமலும் போய்விடும்.

— இவ்வாறு ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (உ-3-6)

## விளையாட்டு சங்கங்கள் அங்குரார்ப்பணம்

யாழ். மாவட்டத்தில் வலைப்பந்தாட்டச் சம்மேளனம் ஒன்றை அமைப்பதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்சங்கத்தில் சேரவிரும்பும் கழகங்களை இக்கூட்டத்திற்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

வலைப்பந்தாட்ட நடுவர்களுக்காக நடத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் இந்நிகழ்ச்சியின் போது இடம்பெறும் என விளையாட்டு அதிகாரி திரு. பா. கிருபாகரன் தெரிவித்தார். (உ-20)

o o o

யாழ்ப்பாணம், ஒக் 30

யாழ். மாவட்ட ஆங்கிலச் சூத்திர மெய்வல்லுநர் சங்கத்தை (ஜே.டி.ஏ.ஏ.) அமைப்பதற்கான கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் யாழ். மாவட்டக் கழகங்கள் தமது பிரதிநிதிகளை இக்கூட்டத்தில் பங்குபற்ற அனுப்பும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ)

## இங்கேயே நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக் 30

மத்திய அரசாங்கத்தின் கீழ் எழுதுவினைஞர் சேவைக்கும் அதனுடன் இணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு யாழ் அரச அதிபருக்கு பொது நிர்வாக அமைச்சிடமிருந்து அனுமதி கிடைத்துள்ளது.

இது தொடர்பாக நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்தோருக்கே நேர்முகப் பரீட்சைகள் விரைவில் இடம்பெறவிருக்கின்றன. (உ-162)

## கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் எழுதுவினைஞர் சேவைக்கும் அதனுடன் இணைந்த சேவைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை தமது பதவிகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அடுத்த மாத இறுதிக்கு முன் பதவி ஏற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பதவியேற்பதற்கான இறுதித்திகதி ஒக்டோபர் 30 என முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்திகதியை நீடிக்குமாறு யாழ். அரச அதிபர் கோரியதை அடுத்து மாகாணசபை நிர்வாகம் இக்கால எல்லையை அடுத்த மாத இறுதிவரை நீடித்திருக்கிறது. (உ-162)

## பனம் விதை நடுங்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 30

மழை பெய்ய ஆரம்பித்து விட்டதால், இப்பருவ காலத்தில் பனை விதை நடுவது ஆரம்பமாகியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்தப் பருவ காலத்தில் ஆகக் குறைந்தது நாலாயிரம் பனம் விதைகளை நடுவதற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமான பனம் விதை நடும் வைபவத்தைத் தொடர்ந்து ஆயிரம் விதைகள் நடப்பட்டு விட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. கொக்குவில் ரயில் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தரிசு நிலத்தில் பெருமளவில் பனம் விதைகள் நடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பருவ காலத்தைப் பயன்படுத்தி பனம் விதைகளை நடுமாறு பிரதேச சங்கம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 30

கடந்த 16 ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் திரியாயில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை இராணுவத்தினர் சுற்றி வளைத்த போது இடம்பெற்ற மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப்டினன்ட் நடேஸ் அல்லது இயல்வாணன் (சோமலிங்கம் மாணிக்கராசா — சம்பல்தீவு), வீரவேங்கை பெரியதம்பி (மாணிக்கராசா புலேந்திரராசா — மூதூர்) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர். (உ-8)

## பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 30

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான பொதுப்பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை யாழ். அரச அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து எடுத்து வந்து கல்வி அலுவலகத்தில் நேற்று ஒப்படைத்துள்ளார்.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் 'குமண' கப்பலில் எடுத்துவரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-8-162)

## வங்கிக் கிளை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 30

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை வாடிக்கையாளரின் நலன் கருதி நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் முன்னர் இயங்கிய ஆஸ்பத்திரி வீதிக் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

யுத்தம் தொடங்கியதைத் தொடர்ந்து இதுவரை காலமும் பிரதேச இணை அலுவலகம் பிரவுண் வீதியில் இயங்கி வந்தது. (அ)


காமாட்சி அம்மாள்
## இந்து பரிபாலன சபை
நீர்வேலி

### சமய பாடப் பரீட்சை - அக்டோபர் 1993

31-10-93 இல் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை 20-11-93 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சை மண்டபம், சுட்டெண் என்பன பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும்.

தி. வேல்நம்பி
தலைவர்
பரீட்சைக் குழு

த. விக்கினேஸ்வரன்
செயலாளர்
பரீட்சைக் குழு

(6707)



## அறிவித்தல்

இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தான வருடாந்த திருவிளக்குப் பூசை இன்று 30-10-93 மாலை 6.00 மணிக்கு இடம்பெறும்.

இணுவில் இந்து
இளைஞர் பேரவை

அம்பிகையின் பேரருளினால் 20-10-93 அன்று இடம்பெற்ற சைவசமய பொதுஅறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழா இன்று இரவு 7.30 மணிக்கு சிவகாம சுந்தரி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறும்.

இணுவை சிவகாமி
அருள் நெறி மன்றம்.

(27887)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெயர்ந்தோருக்கு

# உணவு பொருள் அனுப்ப மட்டுமே நிதி வழங்குவதற்கு திறைசேரி முடிவு

யாழ்ப்பாணம், ஒக் 30

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்ப மட்டுமே நிதி வழங்க முடியும் என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு திறைசேரி அறிவித்துள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக இப்புதிய நடைமுறையை அமுல் செய்ய வேண்டியுள்ளதாக திறைசேரி புனர்வாழ்வு அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக புனர்வாழ்வு அமைச்சு யாழ். செயலகத்துக்கு தகவல் அனுப்பியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களுக்கு, மேலதிகமாக தேவைப்படும் பொருள்களுக்கு முற்பணம் செலுத்தினால் மட்டுமே அவை இனிமேல் அனுப்பப்படும் என செயலகத்துக்கு புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பையடுத்து யாழ். செயலகம் கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை எடுத்து வருவதில் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-3)

# வட-கிழக்குக்கு 177 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு ஒதுக்கீடு

அக்கராயன், ஒக். 30

இம்முறை உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொள்ளுவதற்காக வடகிழக்கு மாகாணத்திற்கென 177 மெ. தொன் விதை உருளைக் கிழங்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக வடகிழக்கு மாகாண விவசாயப்பணிப்பாளர் பி. பெரியசாமி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு 160 மெ தொன், கிளிநொச்சிக்கு 15 மெ. தொன், வவுனியாவுக்கு 8 மெ தொன். மன்னாருக்கு 1 மெ. தொன், முல்லைத்தீவுக்கு 2 மெ. தொன், மட்டக்களப்புக்கு 1 மெ. தொன் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஹொலண்ட் நாட்டில் இருந்து தருவிக்கப்படும் விதை உருளைக்கிழங்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதியே கொழும்பிற்கு வந்து சேரும் எனவும்—

வட-கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு அவ்வப் பகுதி அரசாங்க அதிபர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## ஆடு விநியோகம்

பண்ணைகம் உற்பத்திக் குழு ஆள் அங்கத்தவர் பதினைந்து பேருக்கு மூவாயிரம் ரூபா பெறுமதியான நல்ல இன ஆடுகளை அரச உதவியோடு வழங்கியுள்ளது. (க-28)

# விவசாய தொழில்நுட்ப பயிற்சி வகுப்புக்கள்

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயம் சம்பந்தமான தொழில்நுட்ப பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கு யாழ். மாவட்ட விவசாய திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பெரும்போக பயிர்ச் செய்கையை முன்னிட்டு ஒவ்வொரு விவசாய போதனாசிரியர் பிரிவிலும் விவசாயத்தை எவ்வாறு மேற்கொள்ளுவது என்பது தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் அடுத்த மாதம் முற்பகுதியில் இருந்து ஆரம்பமாகவுள்ளன. (த-17)

# பிரிட்டிஷ் தூதுவர் மட்டுநகர் விஜயம்

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் 2 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த மாதம் 8 ஆம் திகதி மட்டக்களப்பு செல்லவுள்ளார்.

மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் அவர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி, மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசுவார். (த-9)

வடக்கு-கிழக்கிற்கு

# 6 கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் அனுப்பப்பட்டன

கொழும்பு, ஒக். 30

6 கோடியே 9 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளும், மருத்துவ உபகரணங்களும் வடக்கு — கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு கோடியே 4 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளும் —

மட்டக்களப்பிற்கு நான்கு கோடியே 5 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-8)

## ஆங்கில தின போட்டிகள்

பண்டத்தரிப்புக் கோட்ட மட்டத்திலான ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் காலை 8-00 மணி தொடக்கம் நடைபெறும். முதலாம் நாள் எழுத்துப் போட்டிகளும், இரண்டாம் நாள் மனன, பேச்சுப் போட்டிகளும் நடைபெறும்.

கோத்தணி மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றோர் கோட்ட மட்டத்திலான போட்டிகளில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ)

## சைவசமய பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 30

எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் இலங்கை சைவ சமயபாடப் பரீட்சை 93க்கு விண்ணப்பித்த சகல பாடசாலைகளுக்கும் சுட்டெண்கள் அனுப்பப்பட்டுள்ளன.

சுட்டெண்கள் கிடைக்காத பாடசாலை அதிபர்கள் பரீட்சைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

ஈழத் தமிழர் நிலை குறித்து

# தமிழக மடாதிபதிகள் ஆழ்ந்த கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

ஈழத்தமிழர் படும் இன்னல்கள் குறித்து தமது ஆழ்ந்த கவலையை தமிழகத்தில் உள்ள பல ஆதீன முதல்வர்கள் வெளியிட்டனர்.

தமிழகத்துக்குத் திருத்தல யாத்திரை மேற்கொண்டு திரும்பிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இத்தகவலைத் தெரிவித்தார்.

மதுரை, திருவாவடுதுறை, திருப்பனந்தாள், காஞ்சி மெய்கண்டார், தருமபுரம், திருவண்ணாமலை ஆகிய ஆதீனங்களுக்குத் தாம் சென்றிருந்த வேளையில் —

ஈழத்தமிழர் படும் இன்னல்கள் குறித்தும் —

அவர்களின் வாழ்க்கை நிலை குறித்தும் —

விமான குண்டு வீச்சு பாதிப்புக் குறித்தும் — கேட்டறிந்த ஆதீன முதல்வர்கள் தமது ஆழ்ந்த கவலையை தெரிவித்ததாக சுவாமிகள் கூறினார்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியாரையும் தாம் சந்தித்ததாகவும் அவர் சொன்னார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்திக்க ஏற்பாடு செய்வதற்கு பலர் முன்வந்தபோதிலும் தாம் அவரைச் சந்திக்க விரும்பவில்லை என்று மறுத்துவிட்டதாகவும் நல்லை ஆதீன முதல்வர் சொன்னார். (அ-8)


# இலவச பற்சிகிச்சை
# (FREE DENTAL SERVICE)

தமிழீழ மக்களின் நலன் கருதி பின்வரும் தினங்களில் எமது வைத்தியசாலையில் இலவச பற்சிகிச்சை அளிக்கப்படும்.

31 – 10 – 1993
07 – 11 – 1993
14 – 11 – 1993
ஞாயிற்றுக்கிழமை — காலை 8 30 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை

## எமது ஏனைய சேவைகள்

சலுகைக் கட்டண அடிப்படையில் (CONCESSION RATE)

- ✶ அனுபவம் நிறைந்த வைத்தியர்களின் 24 மணிநேர வெளி, உள் நோயாளர் சேவை (24 Hours Service)
- ✶ சகல துறைகளிலும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை (Specialist Consultation)
- ✶ சத்திர சிகிச்சை வசதி (Operation Theatre Facility)
- ✶ மகப்பேறு கூட வசதி (Maternity Section)
- ✶ பற்சிகிச்சை வசதி (Dental Surgery)
- ✶ ஆய்வு கூட பரிசோதனை வசதி (Laboratory Facility)
- ✶ ஈ சி ஜி (E. C. G.)
- ✶ விசேட மருத்துவ விடுதிகள் (Special Ward)
- ✶ இரவு / பகல் மருந்தக சேவை (Day & Night Pharmacy)

"எம் கடன் பணி செய்வதே"



# வில்லியம் ஹாவே
## தனியார் மருத்துவமனை
## WILLIAM HARVEY PRIVATE HOSPITAL

இல. 17, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

NO. 17, KANDY ROAD, CHUNDUKKULI, JAFFNA.

(27829)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மூன்று வார பண்டம், மாமாவி, பண்டம் காப்பிலி குஞ்சுகளும் முட்டை இடும் நல்லினக் கோழிகளும், இக்கி, பாபடிக்கல், மாமாவி, லிபம் இனர் குஞ்சுகளும் தாய்க் கோழியுடன் விற்பனைக்குண்டு. பினாங் பரவை, 152/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம். (27824)

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள், ஊசி நீக்கப்பட்டு 85 நாட்களை வயதுடையவை விற்பனைக்குண்டு. இல. 15, சீனியர் ஒழுங்கை, கலட்டி: யாழ்ப்பாணம். (27818)

5. K. V. மின்வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்றும் டீசல், Panasonic V. D. O. Mixer, ஒன்றும், (WJ-MX -10) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 9.00தொடக்கம் 12 - 00வரை றெலி கோணர், நுணாவில், (மேல்மாடு) சாவகச்சேரி. (6561)

ஆட்டமா, குரக்கன்மா, உழுந்துமா, அரிசிமா, வகைகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அன்னா கோப்பி யாழ்ப்பாணம். திருநெல்வேலி, இணுவில் அன்னாபாம் இணுவில். (இ-6448)

ஆங்கில கட்டுரை தொகுப்பு 105 Composition Models in English பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகிறது. (27807)

அடை வைக்கக்கூடிய நல்லின கோழி முட்டைகள், பண்டம் கோழி முட்டைகள் வாத்து கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர் இல: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27828

## தீபாவளி வாழ்த்து

கண்கவர் வர்ணத் தீபாவளி வாழ்த்து மடல்கள், போஸ்ற்-கார்ட்கள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு மலிவு விலையில் "ஆனந்தன் புத்தக நிலையம்" 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6564)

## தவறிவிட்டது

க. ரூபன் ஆகிய நான் சுன்னாகம் ஊடாக உருப்பிராய் செல்லும் வழியில் எனது இல. 670631397 V உடைய தேசிய அடையாள அட்டை அடங்கிய சிறிய கைப்பை தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் யோகா போட்டோ & வீடியோ, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6706

## மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டுத் தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (27808

## திருத்தவேலைகளுக்கு

உங்கள் வடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிஸ்கோ றேடியோ அன் வோச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வாணியின் அருகில்) யாழ்ப்பாணம். இல. கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-6176)

## புலமைப் பரிசில் பயிற்சி

புதிய கல்வி நிலையத்தால் விஜயதசமியன்று வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் பயிற்சியை (21 கட்டுரைகள், 10 பயிற்சிகள் விடைகளுடன் கணித, தமிழ்ப் புதிர்கள்) சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் நேரடியாகப் பெறுபவர்களுக்கு விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27815)

## வர்த்தகமும் கணக்கியலும்

ஆண்டு 9, கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சைக்குரியதும் 10ஆம், 11ஆம் ஆண்டு 6 மாணவர்களுக்குரியதுமான வர்த்தகமும், கணக்கியலும் வினா-விடை வெளிவந்துவிட்டது. ஆக்கம் என். ராஜன் B. Com. (இ/6450)

## 'நீல் சுகாதார தூபம்'

நீல் சுகாதார தூபம் நித்தம் புகைப்பதால் நுளம்பு தொல்லை எமக்கில்லை. பக்க விளைவு ஏதும் இல்லை. இரவில் நிம்மதியாக உறங்குகிறோம். சுகந்த வாசனை கொண்டது நீல். அன்னா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. பக்கற் ரூபா 8/- "மில்க்வைற்" (இ-6288)

## ஆண்டு 4 வினாத்தாள்

1994 புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3-00 மணிக்கு வெளியிடப்படும் தொடர் பரீட்சை வினாத்தாளின் 14 ஆவது வினாத்தாள் 30-10-93 இன்று வெளியிடப்படும். வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம் எடிசன் அக்கடமி, யாழ் இந்து அருகில், கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (27827)

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L - 94

புதிய வினா : விடை வகுப்புகள்

ஆரம்பம்:
31 — 10 — 1993
ஞாயிறு

பௌதிகவியல்-
திரு. வர்ணன்
12.00 — 1-00

இரசாயனவியல்-
திரு நித்தியானந்தன்
1-00 — 2-00

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(இ-6442)

# மெதடிஸ்த திருச்சபை யாழ்ப்பாண சேகரம்

இன்று 30-10-93 நடைபெறுவதாக இருந்த குரு அபிஷேக ஆராதனை தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— முகாமைக்குரு.

(சி-6449)

# அருண் கல்வி நிலையம்

சாவகச்சேரி.

வர்த்தகப் பிரிவு

## A/L 94 மீட்டல் வினா-விடை வகுப்பு

**ஆரம்பம்: 01 - 11 - 1993**

திங்கள் மாலை 3 30

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | அருந்தவபாலன் |
| வர்த்தகம் | — | பசில், ரவி |
| கணக்கியல் | — | பாலகிருஷ்ணன், சாம் |
| இந்து நாகரிகம் | — | கமலநாதன் |
| புவியியல் | — | சாந்தி |

★ கலைப் பிரிவுக்கான வகுப்புக்கள் வழமையான ஆசிரியர் குழு

★ கணக்கியல் வகுப்புக்கள் வாரத்தில் 4 மணித்தியாலத்திற்கும், ஏனைய வகுப்புக்கள் 3 மணித்தியாலத்திற்கும் குறையாது நடைபெறும்.

(27820)

# மணமக்கள் இல்லற மாமன்றம்

வயது 16க்கும் 86க்கும் இடைப்பட்டோர் பதிவுக் கட்டணம் செலுத்தாது அங்கத்தவராகலாம்.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பிரபல்ய ஜோதிட மேதையின் ஆலோசனையும், சனிக்கிழமைகளில் குடும்ப ஆலோசகரது அறிவுறுத்தலையும், ஞாயிற்றுக்கிழமைகளில் விவாகப் பொருத்துவோரது சேவையையும் உரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.

**மணமக்கள் இல்லற மாமன்றம்**

(பதிவிலக்கம் 13268)

24 புறாடி ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(27817)

# கூட்டுறவு பயிற்சி கல்லூரியின் முகாமைத்துவ பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஒக் 30

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியால் நடத்தப்படும் இவ்வாண்டுக்கான முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பயிற்சி நெறி அடுத்த மாதம் 3ஆம் திகதி காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சி நெறிக்கென ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் மூலம் 40 பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பயிற்சி நெறி கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாக இருந்து பின்னர் பிற்போடப்பட்டது. (த-162)

# மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

தவிர்க்க முடியாத காரணத்தால் 31-10-1993இல் நடத்தவிருந்த சிட்டிழுப்பு 28 - 11 - 1993க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

– தலைவர்.

(6568)

## இன்று 30 - 10 - 1993

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த

# யாழ் / திருக்குடும்பக் கன்னியர் மட இன்ரறக்ட் கழகம்

இராகமாலிகா இசைக்குழுவினருடன் இணைந்து வழங்கும்

# இன்னிசை கானம்

நேரம்: மு. ப. 9 மணி, பி. ப. 2 மணி
இடம்: யா/புனித பத்திரிசியார் கல்லூரி
நுழைவுச் சீட்டுக் கட்டணம்: 100/-, 50/-, 20/-

குறிப்பு: நுழைவுச் சீட்டுக்களை நுழைவாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.


யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்,
இன்ரறக்ட் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

1. பூபாலசிங்கம் புத்தகசாலை,
   மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
2. கணேசன் ஸ்டோர்ஸ்,
   கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
3. G. S. லிங்கநாதன் அன் கோ,
   13 & 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
4. நவநாகரீக மாளிகை,
   65, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

(27826)

# 30 ஆவது நினைவு நாள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 20 — 11 — 1937 | 01 — 10 — 1993 |

## அமரர் றொபேட் தம்பிரட்ணம்

(றெட்னானந்தன்)

கணப்பொழுதேனும் எம்மைப் பிரிந்திருக்க முடியாத நீங்கள்
துடிதுடிக்க விட்டு எப்படித்தான் பிரிந்தீர்களோ
நீங்கள் சொரிந்த அன்பையும் - உங்கள்
குழந்தை உள்ளத்தையும் அழகு வதனத்தையும்
எண்ணி எண்ணி ஏங்குகிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், தாய், சகோதரர், உறவினர்.

5/8, அச்சகட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(27830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உண்மையை மறைக்கும் முயற்சி

வடக்கு-கிழக்கில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தோ, யுத்த ஏற்பாடுகள் குறித்தோ பொதுசன தொடர்பு சாதனங்களுக்கு தகவல் கொடுப்பதற்கு இராணுவத் தலைமைப்பீடம் தடை விதித்திருக்கிறது.

முகாம் பொறுப்பதிகாரிகள் உட்பட இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பத்திரிகைகள் மற்றும் தகவல் சாதனங்களுக்கு தகவல் கொடுக்கும் சகல தர உத்தியோகஸ்தர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை குறித்துக் கொழும்புப் பத்திரிகைகள் செய்த விமர்சனங்கள் தொடர்பாக இராணுவ உயர்பீடம் ஆத்திரமுற்றிருந்தது. அது மட்டுமன்றி, தலைமைப்பீடம் தெரிவித்த தகவல்கள் கருத்துக்களுக்குப் புறம்பானவையாகவும், முரணானவையாகவும் உள்ள கருத்துக்கள், தகவல்கள், விபரங்கள் சில பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன. வேறு சில பத்திரிகைகள் மிக நுணுக்கமான விவரங்களையும் வெளியிட்டிருந்தன.

இவற்றினால் கொதிப்புற்ற இராணுவ உயர்பீடம் அப்போதே இராணுவ நடவடிக்கை சம்பந்தமான செய்திகளைப் பத்திரிகைகளில் வெளிவராமல் தடை செய்யவேண்டும் என்று குதித்தது. அதற்கு அரசு இணக்கவில்லையோ என்னவோ, இப்போது தமக்குள்ளேயே தகவல் கொடுப்பதற்குத் தடை விதித்திருக்கிறது.

இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமான உண்மையான தகவல்கள், விவரங்கள் வெளியே வந்தால் படைகளின் பலவீனம் சிங்கள மக்களுக்குத் தெரியவந்துவிடும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் உகந்த வழி என்று அவர்களை நம்ப வைப்பது கஷ்டமாகிவிடும். அரசியல் தலைவர்களும், படைகளின் தலைவர்களும் சேர்ந்து நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்கிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்து விடுவார்கள் என்ற அச்சமே இந்தத் தடை முயற்சிக்கு மூலகாரணம்.

இராணுவத்தின் பலவீனமும், தவறான வழி நடத்தலும், வெளி உலகத்துக்குத் தெரிய வந்தாலும் பெரும் பாதிப்பு உண்டாகும் என்பதனையும் படைகளின் தலைமைப்பீடம் உணராமல் இல்லை.

மொத்தத்தில் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக அரசியல் ரீதியாகத் தவறான பிரசாரமும், உண்மைக்குப் புறம்பான பிரசாரமும் செய்யப்படுவது போல, இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் உண்மையை மறைக்கும் உத்தியே புதிய ஏற்பாடு.

இராணுவ நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு முன்னர் தகவல் வெளியானால் படையினரின் செயற்பாட்டுக்குக் குந்தகமாக அமையும் என்று சொல்வது வேறு. இராணுவத் தாக்குதல்கள் நடந்த பின்னர் அது பற்றிய விவரங்களை வெளியிடக் கூடாது என்று தடுப்பது உண்மைகளை மறைக்கும் நோக்கத்துடனேயே ஆகும்.

இது சிங்கள மக்களையும், வெளி உலகத்தையும் ஏமாற்றும், இருட்டில் வைத்திருக்கும் ஏற்பாடே அன்றி வேறல்ல; ஆனால் உண்மையை மறைக்க விரும்பும் எவரும் அதனை அடைவது கடினம். இன்றில்லாவிட்டாலும் நாளையாவது உண்மை வெளிவரும். உண்மையை தற்காலிகமாக மறைக்கக் கூடும். ஆனால் அதனை அழித்துவிட முடியாது.

# இன்று நடப்பவை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடல் இன்று காலை 10 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும். (த)

○ ○ ○

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை, வழங்கும் அறிவியல் அரங்கில் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு "நவீன தகவல் தொழில் நுட்பம்" எனும் பொருள் பற்றி வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலரும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளருமாகிய திரு. ஹெக்டர் ஜோசெப் உரையாற்றுவார். இந்த நிகழ்வு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும். (க)

○ ○ ○

யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியின் புதிய அதிபராக திரு. சி. தனபாலன் பதவியேற்றுள்ளதை அடுத்து அவரைப் பாராட்டும் நிகழ்ச்சியும் விருந்துபசாரமும் இன்று சனி நண்பகல் 12 30 மணிக்கு நடைபெறவுள்ளது. சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ஈ-5)

○ ○ ○

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஈ-30)

○ ○ ○

யாழ். றோட்டரிக் கழகம் இளைஞர்களுக்கான சுய சார்பு அடிப்படைத் தொழில் நுட்பப் பயிற்சி வகுப்பொன்றை இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 4-30 மணிவரை நல்லூர் "கம்பன் கோட்டம்" மண்டபத்தில் நடத்தவுள்ளது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிப் போதனாசிரியர்கள் மூவரும் ஒரு மெக்கானிக் திருத்தும் தொழிலாளியும் இப் பயிற்சியை வழங்குவார்கள்.

○ ○ ○

யாழ்ப்பாணம் -சந்நிதி மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடப் பரிபாலன சபை நடத்தும் மாதாந்தச் சொற்பொழிவு இன்று சனி பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும். திரு. மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா "சரித்திரமும் தத்துவமும்" எனும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். (க)

○ ○ ○

வலி கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசம் விவசாய முயற்சிகளில் இரசாயன வளமாக்கிகள், களை கொல்லிகள், பீடைக் கொல்லிகளின் பிரயோகம் ஆகியவை தொடர்பான கருத்தரங்கு ஒன்றை இன்று பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளது. (ஈ-100-30)

○ ○ ○

புலோலி மேற்கு தம்பசிட்டி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் மாதாந்தப் பௌர்ணமி கலைவிழா இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய முன்றலில் நிலையத் தலைவர் திரு அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஈ-30)

○ ○ ○

யாழ் பிரதான வீதி. திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 6. 30 மணிக்கு மாதாந்த கதம்ப நிகழ்ச்சி நடைபெறும்.

கவின் கலைக் கல்லூரி மாணவர்களின் இசை நடன நாடகங்கள் நிகழ்ச்சியில் இடம்பெறும். (ஈ-51)

○ ○ ○

யாழ். இலக்கிய வட்டத்தின் முழு நிலா சந்திப்பு இன்று சனிக்கிழமை மாலை நாலு மணிக்கு 20, குறொசெற் ஒழுங்கை சுண்டுக்குளி இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வுக்கு யாழ். மாவட்ட பிரதி ஆணையாளரும், யாழ். இலக்கிய வட்டத் தலைவருமான த. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார். இன்றைய நிகழ்வின் போது இலக்கிய வட்ட சிறுகதைப் போட்டி மதிப்பீடு செய்யப்படும்.

○ ○ ○

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வழங்கும் முழு நிலா நாள் அறிவரங்கு இன்று மாலை 4. 15 மணி முதல் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த அருட்திரு எஸ். டேமியன் "ஆளுமை விருத்தி" என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

○ ○ ○

யாழ்ப்பாணம், ஒக் 30

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள திருமதி நிர்மலிரேஸ்மணி நாகராசாவுக்கு இன்று பிரிவுபசார விழா நடைபெறுகிறது.

கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை பொன் விழாச்சபை ஆகியவற்றின் ஆதரவில் நடக்கும் இப் பிரிவுபசார நிகழ்வு இன்று மு. ப. 9. 30 மணிக்கு ஆரம்பமாகும். புதிய அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசாவுக்கு வரவேற்புபசார வைபவமும் இதே நிகழ்வின் போது இடம் பெறும். (அ)

○ ○ ○

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஆதரவில் நடைபெற்று வரும் புகைப்படக் கண்காட்சி, இன்றும் நாளையும் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி திறந்து வைப்பார். (அ)

○ ○ ○

காரைநகர் சாயிவளவு நல்விளக்க சபை நடத்தும் நவராத்திரி நடன, இசைப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 9. 00 மணிக்கு ஆரம்பமாகிறது. (அ-89)

## நாளை

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் விழிப்புலனிழந்தோருக்கான வெள்ளைப் பிரம்பு வழங்கலும், தெரிவு செய்யப்பட்டோருக்கு கண்ணாடி வழங்கும் வைபவமும் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக பிராந்திய தலைவர் லயன் எஸ். இராமகிருஷ்ணன் கலந்து கொள்வார். (க)

○ ○ ○

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கு நாளை மாலை நாலு மணிக்கு தமிழ் எழுத்தாளர் மணிமனையில் நடைபெறும். ஆய்வரங்கிற்கு என் மகேந்திரராஜா தலைமை தாங்குவார். ஆய்வரங்கில் "சோதிட விதிகள்" என்னும் பொருளில் கலந்துரையாடல் இடம் பெறும்.

○ ○ ○

யாழ்ப்பாணம், ஒக். 30

இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழக ஆதரவில் தவத்திரு வடிவேற்சுவாமிகள் மலர் வெளியீட்டு விழா நாளை நடைபெற உள்ளது.

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலில் நாளை பி. ப. 4 மணிக்கு நடைபெறும் வெளியீட்டு விழாவில் வாழ்த்துரை, [illegible] வெளியீட்டுரை, ஆய்வுரை, சிறப்புரை என்பன இடம்பெறும்.

சிதுவையில் வைத்து

# நல்லை ஆதீன சுவாமிகள் தடுத்து வைக்கப்பட்டார்!

## இந்து இளைஞர் மன்றம் கண்டனம்

கொழும்பில் தங்கியிருந்த வேளையில், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சீதுவையில் வைத்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 12ஆம் திகதி சுவாமிகள் நீர்கொழும்பு பிள்ளையார் கோவிலுக்கு, அந்த ஆலயத்தின் இரு நிர்வாகிகளுடன் சென்று திரும்பிய போதே சீதுவையில் வைத்து பொலிஸார் அவரை விசாரணைக்கு உட்படுத்தி தடுத்து வைத்தனராம்.

அந்தச் செய்தியை கேள்விப்பட்ட கொழும்பு இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதிகள் சீதுவைக்கு சென்று சுவாமிகளை கொழும்புக்கு அழைத்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தையிட்டு அதிர்ச்சி தெரிவித்தும், கண்டனம் தெரிவித்தும் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

சுவாமிகள் கடந்த செவ்வாய்க்கிழமை 'நரோமா' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் திரும்பினார் என்பது தெரிந்ததே. (ஈ-8)

# தொடர் மழையினால் நெற்பயிர் அழிவு

யாழ்ப்பாணம், ஒக். 30

கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நெற்பயிர் பெருமளவில் சேதமடைந்துள்ளது.

தாழ்ந்த பிரதேசங்களில் முளைகொண்ட நெற்பயிர் நீரில் மூழ்கி அழுகி முற்றாக அழிந்து விட்டதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

மழை பிந்தியதால் மேட்டுப் பிரதேசங்களில் பிந்தியே நெல் விதைக்கப்பட்டது. அது முளை கொண்டு வரும் வேளையில் தொடர்ந்து பெரு மழை பெய்ததால் அவை நீரில் மூழ்கி அழிந்து விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வலிகாமம் மேற்கில் வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை, சுழிபுரம், சித்தன்கேணி ஆகிய இடங்களிலும்—

நவாலி, மானிப்பாய், உடுவில், சுன்னாகம் ஆகிய இடங்களிலும்—

வயல்களில் நீர் நிரம்பி வழிவதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

நவக்கிரிப் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய காற்றினால் பெருமளவான வாழைகள் முறிந்து வீழ்ந்தன. (அ-15-89-51)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக் 30

வறிய மாணவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட இசைத்துறை கழகம் வழங்கும் இராகமாலிகா இசைக் குழுவினரின் இன்னிசை கானம் இசை நிகழ்ச்சி இன்று முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 2மணிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (த)

## கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு ஒக். 30

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும் சர்வோதயமும் இணைந்து நடத்தும் கிராமிய அபிவிருத்தி சம்பந்தமான இரண்டு நாள் கருத்தரங்கு இராமநாதன் கல்லூரியில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். (ஈ-152)

## சான்றிதழ் வழங்கும் விழா

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்ற "இதழியல் அடிப்படைக் கற்கை நெறி"யின் நிறைவு நாள் விழா நாளை நடைபெறுகிறது.

கைலாசபதி கலையரங்கில் நாளை பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும் இவ் விழாவுக்கு புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு இரா. சிவச்சந்திரன் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராகப் பதில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் "கடர்" இ. மகேந்திரனும் கலந்து கொள்வர்.

இதழியல் அடிப்படைக் கற்கை நெறியைப் பயின்ற 120 பேருக்கு நாளைய விழாவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (அ)

## பாடசாலைகளில்

கரும்பராய் இந்துக் கல்லூரியின் அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கலை விழா ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். இசை நிகழ்ச்சி, நடனம், நாடகங்கள் முதலியன கலைவிழாவில் இடம் பெறும். (க)

○ ○ ○

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சோமளம் அம்பலவாணர் தலைமையில் நடைபெறும். (ஈ-161)

## ஆலயங்களில்

வண்ணை சிவன் கோயிலில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 15 மணிக்கு திருவிளக்குப் பூசை நடைபெறும். (க)

○ ○ ○

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட மன்றுவாசும் விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சந்திரகும்ப திருவிழா நடைபெறும். (ஈ-17)

○ ○ ○

வட்டுக் கோட்டை அருள்மிகு அடைக்கலந் தோட்டக் கந்தசுவாமியார் ஆலயத்தில் போயா தின நற்சிந்தனை விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். திரு. பொ. தயாபரசிவம் "இராமலிங்க அடிகளார் சிந்தனைகள்" எனும் பொருள் பற்றி சொற்பொழிவு ஆற்றுவார். (க)

○ ○ ○

புலோலி சிவன் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும். (ஈ-30)

**தடை எல்லாம் உடைத்திடலாம்**
**தருசு நிலமெல்லாம் பயிர்செய்தால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'குமண' புதன் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஒக் 30

கொழும்பில் பொருள்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் 'குமண' கப்பல் நாளை மறு தினம் வடக்கே புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் தனியாருக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பொருள்கள் ஏற்றப்படுவதாகவும்-

அப்பொருள்களை துருவித் துருவி படையினர் சோதனையிடுவதாலும், மழை காரணமாகவும் கப்பல் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் பெரும்பாலும் புதன் அல்லது வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கிடையே நடத்தும்— மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டிகளில்—மென்பந்து கிரிக்கட் ஆட்டங்கள் இன்றும் நாளையும் யாழ். இந்து மைதானத்தில் நடைபெறும்.

ஏழுபேர் கொண்ட அணிகளுக்கிடையில்— 12 ஓவர்களைக் கொண்டதாக—இச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும்,

o o o

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடத்திவரும் கடினப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4-30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் கறுப்பு அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதும். (உ)

## தளபதி கிட்டு விவகாரம்: நீதி கேட்கிறார் வை. கோ!

சென்னை, ஒக் 30

"இந்தியாவில் இருந்து 400 கிலோ மீற்றருக்கு அப்பால் கப்பலில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் தலைவர் கிட்டுவை இந்திய இராணுவம் பிடித்தது நியாயமா? நீதி கேட்கிறேன்."

— இவ்வாறு தி.மு.கவைச் சேர்ந்த எம்பியான வை. கோபாலசாமி நேற்று எழுதியதாக வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

"கருணாநிதியை நாடு கடத்த வேண்டும் என்று கூறிய டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியுடன் கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறன் "மெரிடியன் ஹோட்டலில்" பேச்சுகள் நடத்தியது நியாயமா?" என்றும் அவர் கேட்டார்.

காங்கிரஸுடன் கூட்டுச் சேர தி.மு.க. முயற்சித்து வருகிறது என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

## கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தை முஸ்லிம்கள் தாக்கலாமாம்

கொழும்பு, ஒக். 30

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் முஸ்லிம் பக்கால் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக இந்தியத் தூதரகத்தைச் சுற்றிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீரில் ஹஸ்ரத்பால் [illegible] இந்திய இராணுவம் முற்றுகையிட்டிருப்பதைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை தொழுகையின் பின்னர் கொழும்பில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது ஆனால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவில்லை.

இந்தியர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள கொழும்பு தாஜ் ஹோட்டலுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## வை. கோ. மீது நடவடிக்கை: கருணாநிதி பின் நிற்கிறார்!

சென்னை, ஒக். 30

வை கோபாலசாமிக்கு எதிராக கட்சிக்குள் எந்த நடவடிக்கையும் எடுப்பது இல்லை என தி.மு.க தலைவர் கருணாநிதி முடிவு செய்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்சிக்கு பாதிப்பு வருவதைத் தவிர்ப்பதற்காகவே அவர் நடவடிக்கை எடுக்காமல் பின்வாங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது

ஆனாலும் கோபாலசாமியோ தொடர்ந்து கருணாநிதிக்கு எதிராக செற்பட முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. கருணாநிதியுடன் சமரசம் செய்ய அவர் தயாரில்லையாம்.

"எந்த சமரசத்தையும் ஏற்க முடியாது. பொதுக்குழுவைக் கூட்டியே தீர வேண்டும். கோபாலசாமி மீது குற்றம் சுமத்தியதற்கு தலைவர் பதில் சொல்லியே ஆக வேண்டும்."—என கோபாலசாமியின் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

கோபாலசாமி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என தி.மு.கவின் மாவட்டச் செயலாளர்கள் 31 பேரில் 9 பேர் வலியுறுத்தி வந்தனர்.

கோபாலசாமிக்கு ஆதரவாகச் செயற்பட்ட இந்த 9 பேரில், மூவர் இப்போது கோபாலசாமி கலைஞருக்கு எதிராக தொடர்ந்து போர்க்கொடி தூக்கி நிற்பதை விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் நடத்தப்படும் புதிய மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை நாளை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த-20)

## பதவி நீக்கம்

கொழும்பு, ஒக். 30

ஹெல உறுமய அணித் தலைவரான களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம்.பி.திலக்கருணாரத்தினா, கட்சியின் பண்டாரகம தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

அவருக்கு பதில் திரு ரமணகிரி விக்கிரமநாயக்கா அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். திலக் கருணாரத்னா அனுரா அணி எம்பிக்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

# இந்து நிறுவனங்கள் சமயப்பணியை தீவிரப்படுத்தி உழைக்க வேண்டும்

### தங்கம்மா அப்பாக்குட்டி உரை

யாழ்ப்பாணம், ஒக். 30

இந்துமத நிறுவனங்கள் சமயப்பணியை தீவிரப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. மற்றவர் குறைகளைப் பேசுவதை குறைத்து நிறைகளை கண்டுமகிழ நாம் பழகிக்கொள்ள வேண்டும். இந்து மத தத்துவங்களைப் போதிப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் கலாசாலைகள் நிறுவ வேண்டும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இந்து சமயப் பேரவை நிர்வாகசபை கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்றைய போர்ச் சூழ்நிலையில் ஆலயங்கள் இடிக்கப்படுவதுடன் மக்கள் அநாதைகள் ஆக்கப்படுகின்றனர். இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்து சமயப் பேரவை தயங்காது எடுக்க வேண்டும்.

அண்மையில் துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் சப்பறத் திருவிழா அன்று நடைபெற்ற ஷெல் தாக்குதல் உலகளவிய ரீதியில் கண்டனத்துக்குரியதாம் என்பதை அனைவரும் அறிவர். ஆகையால் இந்துக்களுக்கு எதிராக நடைபெறும் அநீதியை உலகிற்கு உடனுக்குடன் தெரியப்படுத்த சகல தொடர்பு சாதனங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்துமத தத்துவங்களை தெளிவுபடுத்தவும் எமக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை உலகிற்கு அறிவிக்கவும் இந்து சமயப் பேரவை பத்திரிகை ஒன்று வெளியிட இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இன்றைய சூழ்நிலையில் அனைத்து இந்துமத நிறுவனங்களும் ஏதாவது ஒரு சமூகப் பணியில் ஈடுபட அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றார். (த)

## மரண அறிவித்தல்கள்

### சிவப்பிரகாசம் திருவிளங்கம்

(ஓய்வுபெற்ற உப தபாலதிபர், ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவப்பிரகாசம் திருவிளங்கம் இறைபதமடைந்து விட்டார். இவர் திருமதி இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மனோகரன், ஜங்கரன் (லங்கா சிமெந்து லிமிட்டட்), சுமதி (ஆசிரியை, உரப்புலம் குணபாலன் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிமானா, நிரஞ்சனாதேவி (ஜொலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசகுமார், திருமதி ஞானாம்பிகை சிற்றம்பலம், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், சொர்ணலிங்கம், கனகசூரியர், இராசதுரை, தனஞ்செயராஜா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30 - 10 - 93 இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆனைக்கோட்டை கூழாவடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி

கூழாவடி,
ஆனைக்கோட்டை. (6568)

### அப்பாக்குட்டி பீதாம்பரம்

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த அப்பாக்குட்டி பீதாம்பரம் வெள்ளிக்கிழமை (29 - 10 - 93) காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், இலக்குமிதேவியின் அருமைத் தந்தையும், பொன்னம்பலத்தின் (இளைப்பாறிய தபால் ஊழியர், நீர்வேலி) அன்பு மாமனாரும், [illegible] (கா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை — ஆசிரியை), லோகநாதன் (பல் வைத்தியர், வவுனியா ஆஸ்பத்திரி), சுகிர்தன் (யா/பல்கலைக் கழகம் இறுதி ஆண்டு வணிகப் பிரிவு மாணவன்), கமலினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (30 - 10 - 93) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
க. பொன்னம்பலம்
(மருமகன்)

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (27836)

### தலைநகர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'[illegible]' என தமிழ்ப் பெண்களைப்போல காணப்படுகின்றனர்.

இதனால் பொலீஸாரும், படையினரும் இந்த முஸ்லிம்களையும் கைதுசெய்து, காவல் முகாம்களில் அடைத்து வைத்துக்கொண்டு அவர்களை ஆடு, மாடுகளைப் போல அடிமையாக நடத்துகிறார்கள். இத்தகைய கைதுகள் நிறுத்தப்படவேண்டும். — இப்படி அவர் தமது அறிக்கையில் மேலும் கேட்டிருக்கிறார். (உ-3)

### ஆசிரிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது இவர்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும் - இவ்வாறு யாழ் மாவட்ட எம்.பி. ஒருவர் ஜனாதிபதியை கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

அதற்கு எழுதிய பதிலிலேயே ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

இது தொடர்பாக எதிர்வரும் 2 ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெறும் மாநாட்டில் ஆராயப்படும் என்றும்-

அம்மாநாட்டில் உள்ள சகல மாவட்ட கல்விப்பணிப்பாளர்களும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டிருக்கிறார். (உ-3)

### இலங்கை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மத்தி லட்சமாகும்.

இவர்கள் அனைவரும் தத்தமது வீடு, வாசல்களில் இருந்து விரட்டப்பட்டிருக்கிறார்கள்.

1956 இல் அரசு கொண்டுவந்த சிங்களம் மட்டும் சட்டம் மற்றும் அவ்வப்போது ஆட்சியிலிருந்த அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், 1983 இல் இடம்பெற்ற கலவரம் போன்ற கோரச் சம்பவங்கள் அகதிகள் வெளியேற்றத்துக்கு முக்கிய காரணமாக அமைந்தன

பொதுமக்களைத் தாக்குவது, சித்திரவதை செய்வது, சட்டப்படியான விசாரணை இன்றி மக்களைக் கொல்வது போன்றவை நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபட்டது. இதனால் பலர் — அகதிகள் — நாட்டைவிட்டு ஓடும் நிலை ஏற்பட்டது.

முதலில் மனித உரிமைகளை மதிக்கும்படி சம்பந்தப்பட்டோருக்கு நெருக்குதல் கொடுக்கவேண்டும்

நடுநிலையான — பன்னாட்டு — மத்தியஸ்தர்கள் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

இலங்கையில் சமஷ்டி அரசமைப்பு முறையின் கீழ் தீர்வு காணுவதையே அகதிகள் பலர் விரும்புகின்றனர்.

பலவகையான தன்னாட்சி அதிகாரம் பகிர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய சமஷ்டித் தீர்வையே அவர்கள் விரும்புகின்றார்கள். இந்த கருத்தையே சம்பந்தப்பட்டவர்கள் முனைப்பாக பரிசீலிக்க வேண்டும் ஒன்றுபட்ட இலங்கையில் சிங்களவர்களுடன் சமமாக வாழ விரும்புவர்கள் கூறும் மொழி இது என்பதால் இந்த கருத்துக்கு உயர் மதிப்பளிக்க வேண்டும்.

— இவ்வாறு 66 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

### கப்பலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

மருந்துப் பொருள்களையும், பால் மாவகைகளையும் உடைத்து துருவித் துருவி இவர்கள் சோதனை செய்வதால், அவை பழுதடைந்த நிலையிலேயே இங்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### கண் கட்டப்பட்ட..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாலிபர் ஜேர்மனியில் உள்ள தமது பெற்றோருடன் இணைவதற்காக கொழும்புக்கு வந்திருந்தார் என்றும்—

கொழும்பு ஆமர் வீதிக்கு அருகில் உள்ள 'லொட்ஜ்' ஒன்றில் அவர் தங்கியிருந்த சமயம் கடந்த 14ஆம் திகதி வெள்ளை வானில் வந்தவர்கள் அவரது கண்களை கறுப்புத் துணியால் கட்டி வானில் கடத்திச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை செய்தவர்கள் தம்மை பொலீஸ் அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறினர் எனவும்—

தூயதமிழில் விசாரணைகள் நடத்தப்பட்ட[illegible] றும்—விடுதலையான வாலிபர் தெரிவித்த[illegible]

கண்கள் கட்ட[illegible] நிலையில் கடந்த ஞா[illegible] கிழமை அதிகா[illegible] மணியளவில் இவ[illegible] ஹவ்லொக் நீதி[illegible] விற்கு அருகில் [illegible] செய்யப்பட்டார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30 10 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org